**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

*6*. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

*8*. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

*9*. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 03.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ரம்பேவ | நுவரகம் பலாத்த பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

01-247

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது வருடங்கள் 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மொரவெவ | மொரவெவ வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கட்டுகுளம்பற்று மேற்கு பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | கோமரன்கடவலை | கட்டுகுளம் தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கட்டுகுளம் மேற்கு பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

*01-248*

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று வகுதி - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023**

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று வகுதி - தரம் III) வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் தகுதியை பரிசோதிப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையிலிருந்து ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் தற்போதுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தகுதியை பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும்.

இந்நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/தொழில் தகைமைகள் :**

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம் :**

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
(தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக் கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் உறுதிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

அல்லது

உச்ச நீதிமன்றில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : விண்ணப்பதாரரால் சான்றுபடுத்தப்பட்ட அடிப்படைத் தகைமையை நிரூபிக்கும் ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். சேவைக்காலம் ஆரம்பிக்கும் மற்றும் நிறைவடைந்த திகதி தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படலாம்.

* சட்டப் பதவியானது சட்டத்தில் பட்டம் பெற்ற அல்லது உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஒரு பதவியாகும். இது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமையாகும்.

(iii) **உடற் தகைமை :**

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உள மற்றும் உடல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்;
- நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்ப இறுதித் திகதியில் உள்ளவாறு சகல விதத்திலும் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்களிற்கு உரித்தான விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு தாங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படுகின்றவாறு தாங்கள் பங்களிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் மூன்று (03) ஆண்டுகளைக் கொண்ட தகுதிகாண் காலத்துக்கு உட்படுத்தப்படும். உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்பு திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதற்கு தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களைத் தாண்டுவதற்கு முன்னர் அவர்கள் சேவையில் சேர்ந்த மொழி அல்லாத வேறு அரச கரும மொழியிலும் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலப்பகுதியினுள் அரச கரும மொழி தேர்ச்சியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி பிரமாணங்களுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுத்தப்படும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன் தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமே தாங்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெறும் மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்ப இறுதித் திகதியில் உள்ளவாறு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின்பிரகாரம் இந்தப் பதவிக்குரிய (மாதாந்த) சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL 1- 2016) ஆகும்.

6. தகுதிகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டமானது காணப்படும்:

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>ஆகக்கூடிய புள்ளி</th></tr>
<tr><td>01.</td><td>மேலதிக கல்வித் தகைமைகள்</td><td></td><td>25</td></tr>
<tr><td></td><td>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம்</td><td>25</td><td></td></tr>
<tr><td></td><td>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்இருந்துபெற்றுக்கொள்ளப்பட்டசட்டம்தொடர்பான துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான துறையில் பட்டபின் படிப்பு டிப்ளோமா</td><td>20</td><td></td></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம் -</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>• முதலாம் வகுப்பு</td><td>15</td><td></td></tr>
<tr><td></td><td>• இரண்டாம் வகுப்பு (உயர்)</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>• இரண்டாம் வகுப்பு (தாழ்)</td><td>07</td><td></td></tr>
<tr><td></td><td>• சட்டத்தில் பொதுப் பட்டம்</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>(ஈ) சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பு</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>குறிப்பு I : இறுதிப் பரீட்சையில் கௌரவ சித்தியைப் பெற்றிருந்தால் மாத்திரம் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.<br>குறிப்பு II : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td></td><td></td></tr>
<tr><td>02.</td><td>மேலதிக தொழில் அனுபவம் :<br>வழக்குத் தொடர்பான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றம் முன்னிலையில் தோன்றுதல்
<table>
<tr><th></th><th>வழக்குத் தொடரலுக்கான புள்ளிகள் (வழக்கொன்றுக்கு)</th><th>நீதிமன்றம் முன்னிலையில் தோற்றுவதற்கான புள்ளிகள் (வழக்கொன்றுக்கு)</th></tr>
<tr><td>உச்ச நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய சபைகள்</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : மேற்படி தகைமைகளை நிரூபிப்பதற்கு, தொடர்புடைய தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது வழக்கின் கடைசித் திகதிக்கான வழக்கு அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
</table>

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான அறிவு** | | **10** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா. | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் பாடநெறிகளைக் கற்று/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டு பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள். (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் இரண்டு சான்றிதழ்களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| | **குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04 | **மொழித்தேர்ச்சி** : | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பிரதான பாடமாக ஆங்கில மொழியை கொண்டு பின்பற்றப்பட்ட பட்டம். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டங்களில் நடைபெறும் மாதிரி நீதிமன்ற போட்டிகளில் (Moot Court Competitions) வெளிப்படுத்தப்பட்ட ஆங்கில மொழி புலமை<br><br>**தனிநபர்**<br>(i) முதலாம் இடம்/உயர் திறமை -12<br>(ii) இரண்டாம் இடம் -10<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய திறமைகள் -08<br><br>**குழு**<br>(i) முதலாம் இடம்/உயர் திறமை -10<br>(ii) இரண்டாம் இடம் -08<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய திறமைகள் -06 | 12 | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 04 | **மொழித்தேர்ச்சி : (தொடர்ச்சி)** | | **15** |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான ஆங்கில மொழிக்கான டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) கல்வி பொது தராதர (உயர் தரம்) பரீட்சையில் (உள்நாடு அல்லது இலண்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதிவிசேட சித்தி பெற்றிருத்தல், அல்லது IELTS (Academic) மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேற்பட்டது அல்லது TOEFL - IBT மொத்தப் புள்ளிகள் 79, அல்லது அதற்கு மேற்பட்டது அல்லது, TOEFL - CBT மொத்தப் புள்ளிகள் 213 அல்லது அதற்கு மேற்பட்டது அல்லது TOEFL - PBT மொத்தப் புள்ளிகள் 550 அல்லது அதற்கு மேற்பட்டதாகவிருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழியில் உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து ஆங்கில மொழிக்காக NVQ மட்டம் 4 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ். | 05 | |
| | **குறிப்பு** : அதி கூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் ஆற்றல் :**<br>பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கு ஆதரவாக விண்ணப்பதாரரின் :<br>• பலம் (Strength Questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலைக்கேற்ப தீர்மானமெடுக்கும் இயலுமை (Situational Questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• தகைமைகள் (Competency Questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டிற்கு நோக்காக கொள்ளப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்படும் பதில்களின் பிரகாரம் வழங்கப்படும். | | **15** |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்.**- சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை.-**

(i) விண்ணப்பங்களை 2023.02.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) இந்த அறிவித்தலின் இறுதியில் விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் முதலாம் பக்கத்தில் இல. 01 இலிருந்து இல. 03 வரையும், இரண்டாம் பக்கத்தில் இல. 04 இலிருந்து இல. 06 வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 07 இலிருந்து இல. 09 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவேற்று வகுதியின் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால் / சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரினால் / சட்டத்தரணி ஒருவரினால் / பிரசித்த நொத்தாரிச ஒருவரினால் / முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற அலுவலர் ஒருவரினால் அல்லது ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த திரட்டிய சம்பளமொன்றைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்கள தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

9. **தவறான தகவல்களை வழங்குதல்.-** ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் பொய்யான அல்லது தவறான தகவல்களை வழங்குதல் கண்டறியப்பட்டால் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். மேலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்.

10. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணக்குழுவுக்கு உரியதாகும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி பதங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி பதங்களே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவித்தலில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படாத விடயமொன்று சம்பந்தமாக ஏதேனும் பிரச்சினையான நிலைமை எழுந்தால் அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.
2023, சனவரி 19.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று வகுதி - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

*(விண்ணப்பிக்கும் மொழி மூலம் - உரிய இலக்கத்தை இந்த கூட்டினுள் குறிப்பிடவும்.)*
*சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4*

**குறிப்பு** : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற முடியாது.

---

1.0 1.1 முழுப்பெயர் (திரு. /திருமதி/செல்வி) : ..........................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முழுப் பெயர் :..........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி) ..........................................................................
(சிங்களத்தில்/தமிழில்)
உதா. : எம். ஜீ. பீ. எஸ். கே. குணவர்த்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................

3.0 3.1 பால் : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்) [ ]
(ஆண் - 0 பெண் - 1)

3.2 திருமணமானவரா/திருமணமாகாதவரா : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்) [ ]
(திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2)

3.3 பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.4 2023.02.27 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

4.0 தொலைபேசி இல. : நிரந்தரம் [ | | | | | | | | | ]

கைத்தொலைபேசி [ | | | | | | | | | ]

5.0 5.1 நேர்முகப்பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலுக்கு அமைவாக பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம் :

| தகைமை பெற்றுக்கொண்ட நிறுவனம் | தகைமை செல்லுபடியாகும் திகதி |
|---|---|
| .......................................................... | .......................................................... |
| .......................................................... | .......................................................... |

❖ உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :

❖ அடிப்படைத் தகைமையை நிரூபிக்கும் சான்றிதழ்கள்/ ஆவணங்கள் விண்ணப்பதாரரால் சான்றுபடுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் இல. 06 இன் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட தகைமைகள் ஒவ்வொன்றினதும் விபரங்கள் :

5.2 மேலதிக கல்வித் தகைமைகள் :........................................................................................................
..........................................................................................................................................

5.3 மேலதிக தொழில்சார் தகைமைகள் :..................................................................................................
..........................................................................................................................................

5.4 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு :.........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

5.5 மொழித் தேர்ச்சி :

* மேலதிக தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பக்கூடாது, அவற்றை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்கு தயார் செய்து வைத்திருப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

6.0 தாங்கள் ஏதேனும் குற்றச்சாட்டொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

| இல்லை | | ஆம் | |
|---|---|---|---|

(உரிய கூட்டினுள் "✓" அடையாளத்தை இடவும்) (பதிலானது "ஆம்" எனின் அது தொடர்பிலான விபரம் :
..........................................................................................................................................

7.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் சரியானதும் உண்மையானதுமாகும் என்பதையும் இந்த விண்ணப்பத்திலுள்ள சகல பகுதிகளும் உரிய முறையில் நிரப்பப்பட்டுள்ளது என்பதையும் என்னால் செய்யப்பட்ட இந்த வெளிப்படுத்தல் உண்மையற்றதென கண்டுபிடிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் நான் தகைமையற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் கிடைத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன் என்பதையும் சகல சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

...........................
திகதி :...................... விண்ணப்பதாரரின் கையொப்பம்.

8.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை தனிப்பட்ட வகையில் நான் அறிவேன் என்பதையும், அவர் எனது முன்னிலையில் ................. ஆம் திகதியன்று கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................
அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்.

திகதி :......................
முழுப்பெயர் :...............................
பதவி :................................
திகதி :...................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

9.0 ***திணைக்களத் தலைவரின் சிபாரிசு*** :

மேற்படி விபரங்களை சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ............................... இந்த நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் என்பதையும், அவர் வழங்கியுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும், அவரது வேலை மற்றும் வருகை திருப்திகரமானது என்பதையும், அவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்பதையும், இந்தப்

பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால், இந்த நிறுவனத்தினது சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

பெயர் :...............................
பதவி :......................
முகவரி :..................
திகதி :...............................
(பதவி முத்திரையை பொறிக்கவும்)

01-301

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – குருநாகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச்

செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| குருநாகலை | கனேவத்த | மஹாகல்பட எகொட ஹிரிபிட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹிரியால ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகலை. |

01-316

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவின் பொகவந்தலாவ பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

01-317

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதற்காக தகைமை பெற்ற ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத் தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications - Institutional Exams" பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலையூடாக (Online) மாத்திரமே முன்னிலைப்படுத்தப்பட முடியும். விண்ணப்பப் படிவத்தை நிகழ் நிலை மூலமாக முன்னிலைப்படுத்தியதன் பின்னர் அதனை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியொன்றைப் பெற்று அதில் உரிய பகுதிகளை தமது கையெழுத்துக்களால் பூரணப்படுத்தி விண்ணப்பதாரரின் கையெழுத்தினை

சான்றுப்படுத்தி, நிறுவனத் தலைவரினதும் சான்றுப்படுத்தலுடன், விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் செய்தல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்தின் நகல் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்). தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023" என்பதாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.02.10 ஆகும். இப் பரீட்சை 2023 மார்ச் மாதம் நடாத்தப்படும்.

**குறிப்பு 1.**- விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றை தபால் மூலமாக அனுப்பிவைப்பது கட்டாயமாகும் என்பதுடன். அது தபாலில் தொலைந்தமை அல்லது தாமதித்தமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் எவையும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பப்படிவத்தை அனுப்பாமல் தாமதம் செய்வதால் ஏற்படக் கூடிய இழப்புக்களுக்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

02. **சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் முறை:**

2.1 இதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இவ் வர்த்தமானி அறிவித்தலின் 10.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்து மூலமான போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

2.2 எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாப்பத்திரங்களிலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் உரிய வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு (02) மடங்கு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் 10.2 பந்திக்கமைய பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறும் விண்ணப்பதாரர்களது பெயர்ப் பட்டியல் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். (தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப்பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.)

2.3 பொது நேர்முகப்பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டவர்களாக கருதப்படும் விண்ணப்பதாரர்கள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் 10.3 பந்திக்கமைய செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் கல்வி அமைச்சு/உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பரீட்சைகள் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பப்படும். செயன்முறைப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களுக்கு உரிய வெற்றிடங்கள் உள்ளடங்கிய ஆவணம் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்கள் குறித்த வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கு தமது விருப்பு முன்னுரிமை அடிப்படையில் வரிசையாக விருப்பினைத் தெரிவித்தல் வேண்டும்.

2.4 செயன்முறைப் பரீட்சை மற்றும் எழுத்து மூலப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில், விண்ணப்பித்துள்ள மொழி மூலம், பாடம் மற்றும் பாடசாலையின் வகைக்கு அமைவாக பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

2.5 இவ் வர்த்தமானி அறிவித்தலுக்குரிய நியமனப் பாடங்களுக்குரிய வெற்றிடங்கள் அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு 2.**- ஒரே பாடசாலைக்கு விருப்புத் தெரிவித்துள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் பாடசாலைகளில் நிலைப்படுத்துதல் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரால்/உரிய மாகாணத்தின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2.6 இவ் ஆட்சேர்ப்பானது பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படு கின்றமையால் ஐந்து (05) வருடங்கள் நிறைவடையும் வரையில் எந்தவொரு காரணத்திற்காகவும் இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது.

2.7 இவ் ஆட்சேர்ப்பின் போது தேசிய மற்றும் மாகாண அடிப்படையில் வெவ்வேறாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2.8 தங்களுக்கு தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள் ஆகிய இரண்டு (02) வகைக்கும் அல்லது ஒரு வகைப் பாடசாலைக்கேனும் விருப்பினைத் தெரிவிக்க முடியும்.

2.9 தேசிய பாடசாலைகள்/ மாகாணப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு மாத்திரம் விருப்புத் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்களது பெறுபேறுகள் அவர்களது விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்த வதிவிட மாகாணத்திற்கமைய அவ்வவ் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். 2022 ஆம் வருடத்திற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மாகாணமே நிரந்த வதிவிட மாகாணமாக கருத்தில் கொள்ளப்படும். (தேசிய பாடசாலைகளுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களது பெறுபேறுகள் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது)

2.10 சகல விண்ணப்பதாரர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் செல்லுபடியாகும்.

2.10.1 அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்கள் விண்ணப்பிக்கும் தேசிய/ மாகாண பாடசாலைகளுக்கு அமைய விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி மூலத்திற்குரிய வெற்றிடங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் கருத்தில் கொள்வதற்காக தமது நிரந்தர வதிவிட மாகாணத்திற்கு மேலதிகமாக, இன்னொரு மாகாணத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். அதற்கமைய குறித்த மேலதிக மாகாணத்தை விண்ணப்பப்படிவத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

2.10.2 அவ்வாறாக விண்ணப்பிக்கும் மேலதிக மாகாணம் தாங்கள் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி மூலத்திற்கான வெற்றிடங்கள் தேசிய/மாகாணப் பாடசாலைகளில் இல்லாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே கருத்தில் கொள்ளப்படும்.

2.10.3 இதன் போது மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ள மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தையுடைய விண்ணப்பதாரர்களை சேர்த்துக் கொண்டதன் பின்னர் மேலும் வெற்றிடங்கள் நிலவும் பட்சத்தில் மாத்திரம் மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

க.கொ:- கிழக்கு மாகாணத்தில் நிரந்த வதிவிடத்தையுடையவர்களல்லாத விண்ணப்பதாரர்கள் கிழக்கு மாகாணத்தில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்பப் பாடத் துறை மற்றும் ஆலோசனை ஆகிய பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

03. **சேவைக்கு நியமிப்பதற்கான நிபந்தனைகள்:**

3.1 இந் நியமனங்கள் யாவும் தற்காலிக நியமனங்கள் ஆகும். ஒரு (01) வருட முன் சேவைப் பயிற்சிப் பாடநெறி உட்படலாக மூன்று (03) வருட முன் சேவைக் காலத்திற்குரியதாக இத் தற்காலிக நியமனம் வழங்கப்படும்.

3.2 நியமனம் பெற்று மேற்படி முன் சேவை பயிற்சிப் பாடநெறியை நிறைவு செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு 3 வருடங்கள் நிறைவில் இலங்கை ஆசிரியர் சேவைக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

3.3 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசின் நிதிப் பிரமாணங்களுக்கும் நிறுவனங்களில் காணப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் இத் தற்காலிக நியமனம் உட்படும்.

04. **சம்பளம்/சம்பள அளவு :**

4.1 இத் தற்காலிக நியமனத்தைப் பெற்றுக்கொள்ள தகைமை பெறுபவர்களுக்கு ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் பணியாற்றிய அரசாங்க சேவை பதவியில் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு நியமனம் உறுதி செய்யப்படும் வரையில் சம்பளம் வழங்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: இலங்கை ஆசிரியர் சேவைக்கு நிரந்தர நியமனம் பெறும் திகதி முதல் பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம். 03/2016 (iv) உடைய சம்பள சுற்றுநிருபத்திற்கமைய GE 01-2016 இல், ரூ. 31,490 -445 × 6-525 × 7-600×2- ரூ.39,035.00 (மாதாந்தம்) சம்பள அளவிற்கு உரித்துடையவராவார். இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு இச் சம்பள அளவுத் திட்டத்தின் 14 ஆம் கட்டமான ரூ. 37835.00 சம்பளத்தில் நிலைநிறுத்தப்படுவார். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவர்.

05. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1 2014.10.23 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 உடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2023.02.10 ஆந் திகதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருந்தல் வேண்டும்.

5.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பட்டமொன்றுடன் குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

5.1.2 பட்டதிற்காக தொடர்ந்துள்ள பிரதான பாடம்/பாடங்களுக்கு அமைவாக மாத்திரம் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாக தமது பட்டத்திற்காக தொடர்ந்துள்ள பாடங்களின் (Credit எண்ணிக்கையில்) 1/3 பகுதியைப் பூரணப்படுத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்:** மேலே 5.1.1 மற்றும் 5.1.2 நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ள வேண்டும்.

- தமது பட்டத்திற்கமைய தாம் விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- உயர் தரம் மற்றும் சாதாரண தர பாடத்திட்டத்திற்குரியதாக பட்டத்தில் காணப்படும் பாடங்கள் தகைமைகளை பரீட்சிக்கும் போது கருத்தில் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாக பிரதான பாடமொன்றுடன் கூடிய பட்டத்தைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டுள்ள பட்டத்துடன் விண்ணப்பதாரர் கொண்டிருக்கும் மேலதிக தகைமைகளும் கருத்தில் கொள்ளப்படும்.
- முழுமையாக விவரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தில் (Transcript) உள்ளடங்கும் பாடங்கள் (credit எண்ணிக்கை) குறிப்பிடப்படவில்லை எனின் அதனை உரிய பல்கலைக்கழகத்தினூடாக உறுதி செய்து அதற்குரிய ஆவணங்களை பொது நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும்.
- பட்டத்தில் தொடர்ந்துள்ள பாடங்கள் தொடர்பாக ஏற்படக் கூடிய முரண்பாடுகள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளர்/ மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவையே சாரும்.
- பாடசாலை முறைமையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூரணப்படுத்தும் போது இரண்டு (02) கட்டங்களாக ஆசிரியர் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் ஒரே விண்ணப்பதாரர் க.பொ.த. (உயர் தர) மற்றும் 13 வருட தொடர்கல்வி வேலைத்திட்டத்தின் கீழான பாடங்கள் வகுப்புக்குரிய இரண்டு பாடங்கள் மற்றும் க.பொ.த (சா.த.) மற்றும் ஏனைய பாடங்கள் வகுப்புக்குரிய இரண்டு பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இதன் போது க.பொ.த. (உயர் தர) மற்றும் 13 வருட தொடர்கல்வி வேலைத்திட்டத்தின் கீழான பாடங்கள் வகுப்புக்குரிய பாடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.1.3 இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள விதிமுறைகளைக்கு அமைவாக அனைத்து விண்ணப்பதாரர்களும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில் ஒரு பாடமாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு சமமாக ஏற்றுக்கொள்ளும் வேறு பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு 3**

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள், ஆகக் குறைந்த தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

**1. க.பொ.த. (உயர் தர ) பாடங்கள் மற்றும் 13 வருட தொடர் கல்வி வேலைத்திட்டத்தின் கீழான பாடங்கள்:**

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 101 | இரசாயனவியல் Chemistry | நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமொன்றாக பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதியை க.பொ.த. (உயர் தர) பாடத் திட்டத்திற்கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதியை உரிய பாடத்திற்குரியதாக தொடர்ந்திருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 102 | பௌதிகவியல் Physics | நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமொன்றாக பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதியை க.பொ.த. (உயர் தர) பாடத் திட்டத்திற்கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதியை உரிய பாடத்திற்குரியதாக தொடர்ந்திருத்தல். |
| 103 | உயிரியல் Biology | நான்கு வருட விசேட பட்டத்தில் பிரதான பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/ தாவரவியல் உயிரியல் அல்லது கால்நடை விஞ்ஞானத்தைத் தொடர்ந்திருத்தல் மற்றும் பிராதன பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/ தாவர உயிரியலைத் தொடர்ந்திருப்பின் அடுத்த பாடமாக கால்நடை விஞ்ஞானத்தையும், பிரதான பாடம் கால்நடை விஞ்ஞானம் எனின் அடுத்த பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/ தாவர உயிரியல் பாடத்தையும் ஆகக் குறைந்தது இரண்டு வருட காலம் உயர் தர பாடத் திட்டத்திற்கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட சாதாரண பட்டத்தில் தாவரவியல் விஞ்ஞானம்/ தாவர உயிரியல் மற்றும் கால்நடை விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களும் ஒன்றிணைந்ததாக மொத்தப் பாடத் தொகுதியின் ஆகக் குறைந்தது 1/3 பகுதியைத் தொடர்ந்திருத்தல் |
| 104 | விவசாய விஞ்ஞானம் Agricultural Science | விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமானி (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agri Business Management)<br>ஏற்றுமதி விவசாய விஞ்ஞானமானி பட்டம்<br>(B.Sc. Export Agriculture)<br>மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் அல்லது<br>உயர் தர விவசாய விஞ்ஞானப் பாடத் திட்டத்திற்கமைவானதாக மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி உரிய பாடத்திற்குரிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல். |
| 105 | இணைந்த கணிதம் Combined Mathematics | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமொன்றாக பிரயோக கணிதம் அல்லது தூய கணிதத்தைத் தொடர்ந்திருத்தல் மற்றும் பிரதான பாடம் பிரயோக கணிதம் எனின் அடுத்த பாடமாக தூய கணிதத்தையும், பிரதான பாடம் தூய கணிதம் எனின் அடுத்த பாடமாக பிரயோக கணிதத்தையும் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களேனும் தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட சாதாரண பட்டமொன்றில் பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய இரண்டு பாடங்களும் ஒன்றிணைந்ததாக மொத்தப் பாடத் தொகுதியின் ஆகக் குறைந்தது 1/3 பகுதியைத் தொடர்ந்திருத்தல். |
| 106 | பொறியியல் தொழில்நுட்பவியல் Engineering Technology | பட்டத்தில் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதி நிர்மாணம், எந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல் போன்ற பாடத் துறைகளை உள்ளடக்கியதாக பட்டத்தைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>பொறியியல் பட்டமொன்றைப் (நிர்மாணம், எந்திரவியல், மின் மற்றும்/ அல்லது இலத்திரனியல்) பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 107 | உயிர் முறைமை தொழில்நுட்பவியல் Bio Systems Technology | விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பட்டம் (BBST)<br>மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் அல்லது<br>உயர் தர உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத் திட்டத்திற் கமைவானதாக மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி உரிய பாடத்திற்குரிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல் |
| 108 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் Science for Technology | விஞ்ஞானமானி பட்டத்தில் காணப்படும் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதி பௌதிகவியல் பாட உள்ளடக்கங்களைக் கொண்ட பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல். |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் Information & Communication Technology | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்று. பட்டப் பாடநெறியின் மொத்த பாடத் தொகுதியின் 1/3 பகுதி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்குரியதாக இருத்தல் வேண்டும். |
| 110 | கணக்கீடு Accounting | கணக்கீடு தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது<br>கணக்கீட்டினைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 111 | வணிகக் கல்வி Business Studies | வணிகக் கல்வி மற்றும் வியாபார முகாமைத்துவத்திற்குரிய பாடங்களை பிரதான பாடமாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 112 | வணிக புள்ளிவிபரவியல் Business Statistics | வணிகப் புள்ளிவிபரவியலைப் பிரதானமான பாடமொன்றாக அல்லது புள்ளிவிபரவியல் பாடத்தைக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 113 | அளவையியலும் விஞ்ஞான முறையும் Logic and Scientific Method | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>அளவையியல் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>அளவையியல் மற்றும் விஞ்ஞான முறையை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 114 | பொருளியல் Economics | பொருளியல் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது<br>பொருளியலை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 115 | புவியியல் Geography | புவியியல் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>புவியியலை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 116 | அரசியல் விஞ்ஞானம் Political Science | அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அரசியல் விஞ்ஞானத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 117 | மனைப் பொருளியல் Home Economics | மனைப் பொருளியல் தொடர்பான பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் 2 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தையுடைய பாடநெறியொன்றுடன் ஆகக் குறைந்தது NVQ 4 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் மனைப்பொருளியல் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் மனைப் பொருளியல் பாடத்தைக் கற்று A அல்லது B சித்தியைப் பெற்றிருத்தல். |
| 118 | வரலாறு (இலங்கை வரலாறுடன் இந்திய/ ஐரோப்பிய/நவீன உலக) History of Sri Lanka (Indian/ Europe / Contemporary) | வரலாறு தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>வரலாற்றை பிரதான பாடமொன்றாகக் கொண்ட கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 119 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி Communication & Media Studies | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 120 | பௌத்த நாகரீகம் Buddhist Civilization | பௌத்த நாகரீகம், பௌத்த கலாசாரம், பௌத்த கல்வி, பௌத்த தத்துவங்கள் மற்றும் பாளி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள பட்டமொன்று |
| 121 | கிறிஸ்தவ நாகரீகம் Christian Civilization | கிறிஸ்தவ நாகரீகம், கிறித்தவ சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 122 | இந்து நாகரீகம் Hindu Civilization | இந்து நாகரீகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 123 | இஸ்லாமிய நாகரீகம் Islamic Civilization | இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 124 | பௌத்த சமயம் Buddhism | பௌத்த நாகரீகம், பௌத்த கலாசாரம், பௌத்த கல்வி, பௌத்த தத்துவங்கள் மற்றும் பாளி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள பட்டமொன்று |
| 125 | இந்து சமயம் Hinduism | இந்து நாகரீகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 126 | கிறிஸ்தவ சமயம் Christianity | கிறிஸ்தவ நாகரீகம், கிறித்தவ சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 127 | இஸ்லாம் Islam | இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 128 | சித்திரக் கலை Art | சித்திரக் கலை/சிற்பக் கலை பாடம் மற்றும் உரிய பாடங்கள் தொடர்பான கட்புலக் கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>சித்திரக் கலை/சிற்பக் கலை பாடம் மற்றும் உரிய பாடங்கள் தொடர்பான நுண்கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்கான பட்ட மொன்றைப் பெற்றிருத்தல் |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 129 | நடனம் (தேசிய) Dancing (Traditional) | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்கான அரங்கியற் கலை/ நுண்கலை/ கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (நியமன அதிகாரியால் நடாத்தப்படும் தேசிய நடன திறன்கள் தொடர்பான செயற்முறைப் பரீட்சையில் சித்தியடையும் நிபந்தனையின் கீழ்) |
| 130 | நடனம் (பரதம்) Dancing (Bharatha) | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்கான அரங்கியற் கலை/ நுண்கலை/கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| 131 | கீழைத்தேய சங்கீதம் Oriental Music | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம்<br>அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்கான அரங்கியற் கலை/ நுண்கலை/கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 132 | கர்நாடக சங்கீதம் Carnatic Music | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்கான அரங்கியற் கலை/ நுண்கலை/கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 133 | மேலைத்தேய சங்கீதம் Western Music | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியல் கலை/ நுண்கலை/ கலைமானி விசேட பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 134 | நாடகமும் அரங்கியலும் Drama & Theatre | உரிய பாடத்தில் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தில் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடம் தொடர்பாக பெற்றுள்ள அரங்கியற் கலை/ நுண்கலை/ கலைமானி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 135 | சிங்களம் Sinhala | சிங்களம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 136 | தமிழ் Tamil | தமிழ் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது தமிழைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 137 | ஆங்கிலம் English | ஆங்கிலம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 138 | அரபு Arabic | உரிய பாடத்தைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்த வெளிநாட்டு மொழிகள் பட்டமொன்று அல்லது உரிய பாடத்திற்குரிய விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 139 | பிரெஞ்சி French | |
| 140 | சீன மொழி Chinese | |
| 141 | யப்பான் மொழி Japanese | |
| 142 | ஜெர்மன் மொழி German | |
| 143 | ரஷ்ய மொழி Russian | |
| 144 | மலாய் Malay | |
| 145 | ஹிந்தி Hindi | |
| 146 | கொரிய மொழி Korean | |

| | | |
|---|---|---|
| 201 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு Child Psychology and Care | குழந்தை உளவியலைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்று அல்லது குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பினை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 202 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு Health and Social Care | சுகாதார மேம்பாட்டு விஞ்ஞானமானி (விசேட ) பட்டம் அல்லது சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பினை பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 203 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு Physical Education and Sport | விஞ்ஞானமானி (உடற் கல்வி) விசேட பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது உடற்கல்வி மற்றும் விளையாட்டைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 204 | அரங்கக் கலை Performing Arts | அரங்கியற் கலை தொடர்பான விசேட பட்டம் அல்லது<br>கலைமானி – விசேட (அரங்கக் கலை/ நுண்கலை/ நடனம்/ சங்கீதம்) பட்டம் அல்லது<br>நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பான கலைமானி விசேட பட்டம் அல்லது<br>கல்விமானி (நாடகமும் அரங்கியலும்) பட்டம் அல்லது<br>அரங்கியற் கலை அல்லது நுண்கலையினை பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 205 | நிகழ்ச்சி முகாமைத்துவம் Event Management | விருந்தோம்பல், சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவ பட்டம் அல்லது<br>நிகழ்ச்சி முகாமைத்துவத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 206 | கைத்திறன் கலை<br>Arts and Crafts | கட்புலக் கலை விசேட பட்டம் (சித்திரக் கலை, சிற்பக் கலை, அச்சுக் கலை, ஜவுளி மற்றும் ஆடை சார்ந்த கலைகள் போன்றன) அல்லது<br>கட்புலக் கலை மற்றும் திட்டமிடல் விசேட பட்டம் (சித்திரக் கலை மற்றும் கிரபிக்) அல்லது<br>கட்புலம் மற்றும் தொழில்நுட்பக் கலை விசேட பட்டம் அல்லது<br>கலைமானி அல்லது நுண்கலைமானி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (சித்திரக் கலை/ கிரபிக்/ சிற்பக் கலை/ கட்புலம் மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்திருத்தல்) |
| 207 | உள்ளக வடிவமைப்பு<br>Interior Designing | உள்ளக வடிவமைப்புக் கலைக்கான விஞ்ஞானமானி பட்டம் அல்லது நிர்மாணமானி பட்டம் அல்லது உள்ளக வடிவமைப்புக் கலை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது<br>உள்ளக வடிவமைப்பினைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 208 | நவநாகரீக வடிவமைப்பு<br>Fashion Designing | கட்புலக் கலை விசேட பட்டம் (ஜவுளி மற்றும் ஆடைக் கலைகள்) அல்லது<br>நிர்மாணமானி பட்டம் அல்லது<br>நவநாகரீக வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாடு தொடர்பான பட்டம் அல்லது<br>நவநாகரீக வடிவமைப்பினை பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள பட்ட மொன்றைப் பெற்றிருத்தல். |
| 209 | கிரபிக் வடிவமைப்பு<br>Graphic Designing | நிர்மாணமானி பட்டம் அல்லது<br>கட்புலக் கலை மற்றும் திட்டமிடல் தொடர்பான கலைமானி பட்டம் (சித்திரம் மற்றும் கிரபிக்) அல்லது<br>கணினிப் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது<br>கணினி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>பட்டத்தில் பிரதானமான பாடமொன்றாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டமொன்று அல்லது<br>கணினி விஞ்ஞானப் பாடம் உள்ளடங்கியுள்ள விஞ்ஞானமானி பட்டம் அல்லது (மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத் தொகுதியின் 1/3 பகுதி பாடங்களை கிரபிக் வடிவமைப்பு தொடர்பான பாடங்களாக தொடர்ந்திருத்தல் வேண்டும்)<br>கிரபிக் வடிவமைப்பினை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 210 | நிலத் தோற்ற வடிவமைப்பு<br>Landscaping | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் தோட்டவியல் விஞ்ஞானம்/ நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகிய பாடங்களைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>நிலத்தோற்ற வடிவமைப்பினை பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்ட மொன்றைப் பெற்றிருத்தல். |
| 211 | பிரயோக தோட்டக்கலை தொழில்நுட்பக் கல்வி<br>Applied Horticultural Studies | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் தோட்டவியல் விஞ்ஞானம்/ நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகிய பாடங்களைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>பிரயோக தோட்டக்கலை விஞ்ஞானத்தை பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 212 | கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Livestock Product Studies | விவசாய விஞ்ஞான பட்டமொன்றில் கால்நடை விஞ்ஞானம் கால்நடை வளங்களின் உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை விசேடமாக தொடர்ந்திருப்பதுடன் அல்லது கால்நடை வளர்ப்பு மீன்வளங்கள் தொடர்பான பட்டம் அல்லது<br>கால்நடை உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம்/ கால்நடை வளங்கள் உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 213 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Food Processing Studies | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பட்டம் அல்லது<br>உணவு விஞ்ஞானம் மற்றும் போஷனை தொடர்பான பட்டம் அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் உணவு விஞ்ஞானம்/ உணவு உற்பத்தித் தொழில்நுட்பத்தை விசேடமாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் அல்லது உணவுப் பதப்படுத்தல் தொழில்நுட்பவியலைப் பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 214 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக் கல்வி Aquatic Resource Studies | நீரியல் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் கால்நடை விஞ்ஞானம்/ கால்நடை வளங்கள் உற்பத்தித் தொழில்நுட்பம்/ நீரியல் வளங்கள் தொழில்நுட்பப் பாடம் போன்றனவற்றை பாடங்களாகத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது மீன்பிடி மற்றும் சமுத்திரவியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது நீரியல் வளங்கள் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 215 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Plantation Product Studies | ஏற்றுமதி விவசாயம் தொடர்பான பட்டம் அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் பெருந்தோட்டப் பயிர்கள்/ பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத்தை பாடமொன்றாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத்தை பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 216 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி Construction Studies | சிவில் பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது நிர்மாணம் மற்றும் கட்டட சேவைகள் தொழில்நுட்பவியல் உள்ளடங்கிய பொறியியல் தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>நிர்மாணத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட வேறு ஏதேனுமொரு பட்டமொன்று அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிக் காலத்தையுடைய ஆகக் குறைந்தது NVQ 4 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 217 | மோட்டார் எந்திரவியலில் தொழில்நுட்பக் கல்வி Automobile Studies | தொழில்நுட்பமானி பட்டம் (மோட்டார் எந்திரவியல்) அல்லது<br>பொறியியல் விஞ்ஞானமானி (மோட்டார் எந்திரவியல்) பட்டம் அல்லது<br>மோட்டார் எந்திரவியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 218 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி Electrical and Electronic Studies | மின் பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>பிரயோக இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>மின் அல்லது இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 219 | ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி Textile and Apparel Studies | நிர்மாணமானி பட்டம் அல்லது<br>ஜவுளி மற்றும் ஆடை தொடர்பான பொறியியல் விஞ்ஞான முதல் பட்டம் அல்லது தொழில்நுட்பவியல்மானி பட்டம் அல்லது<br>ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 220 | உலோகப் புணைவுத் தொழில்நுட்பக் கல்வி Metal Fabrication Studies | தொழில்நுட்பமானி பட்டம் ( எந்திரவியல்) அல்லது<br>எந்திரவியல் தொழில்நுட்பவியலைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதரண பட்டமொன்று அல்லது<br>உலோக புணைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்று அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் ஆகக் குறைந்தது NVQ 3 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான உலோக புணைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 221 | அலுமினியம் புணைவுத் தொழில்நுட்பக் கல்வி Aluminum Fabrication Studies | தொழில்நுட்பமானி பட்டம் (சிவில்/நிர்மாணம்/எந்திர வியல்) அல்லது<br>அலுமினியம் புணைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்று அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் ஆகக் குறைந்தது NVQ 3 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான அலுமினியம் புணைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 222 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு Computer Hardware and Networking | மூன்று வருட காலத்தையுடைய தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், கணினி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (குறித்த பட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறைகளில் பாடப் பகுதிகளை தொடர்ந்திருத்தல்) அல்லது<br>நான்கு வருட காலத்தையுடைய தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம்/ கணினி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (குறித்த பட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறைகளில் பாடப் பகுதிகளை தொடர்ந்திருத்தல்.) அல்லது<br>கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்ட விஞ்ஞானமானி/ தொழில்நுட்பமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அதன் மொத்தப் பாடத் தொகுதியின் 1/3 பகுதியை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு பாடத்துறையில் தொடர்ந்து சித்தியடைந்திருத்தல்.<br>பாடத் துறைகள்<br><br>i) Computer Hardware<br>ii) Computer system Engineering<br>iii) Computer Network<br>iv) Computer Architecture<br>v) Operating System<br>vi) Electronics<br>vii) Arduino Technology<br>viii) IT Security<br>ix) Network Security<br>x) Information Security<br>xi) Cyber Security<br>xii) Computer Hardware and Network related projects |
| 223 | உற்பத்தி Manufacturing | மூன்று வருட இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 224 | சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் Tourism & Hospitality | சுற்றுலாத்துறை முகாமைத்துவ விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>விருந்தோம்பல் முகாமைத்துவ விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகமானி பட்டம் அல்லது<br>விருந்தோம்பல், சுற்றுலாத்துறை வணிக நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை முகாமைத்துவ விசேட பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை முகாமைத்துவ பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை மற்றும் கலாசார வளங்கள் முகாமைத்துவ பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பலை பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 225 | வழங்கல் முகாமைத்துவம் Logistic Management | பட்டத்தில் பிரதான பாடமொன்றாக வழங்கல் முகாமைத்துவப் பாடத்தைத் தொடர்ந்திருத்தல். |
| 226 | சந்தைப்படுத்தல் Marketing | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாக அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பாக அல்லது வியாபார முகாமைத்துவம் தொடர்பாக அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது வணிகமானி பட்டம் அல்லது பிரதான பாடமொன்றாக சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் உள்ளடங்கியுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

**2. க. பொ. த. (சாதாரண தர) மற்றும் ஏனைய பாடங்கள்**

| | | |
|---|---|---|
| 301 | மாணவர் ஆலோசனை Counselling | உளவியல்/ சமூக விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது<br>உளவியல்/ சமூக விஞ்ஞானம் தொடர்பான சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன்,<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்ட மளிக்கும் நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆலோ சனை தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத ஆலோசனை தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆலோசனை தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத ஆலோசனை தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா பாடநெறியொன்றைப் பெற்றிருத்தல். |
| 302 | விசேட கல்வி Special Education | விசேட கல்வி தொடர்பான பட்டமொன்று அல்லது உட்படுத்தல் கல்வி தொடர்பான பட்டமொன்று அல்லது பேச்சு மற்றும் கேட்டல் தொடர்பான விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

4. க.பொ.த (சாதாரண தர) பாடங்கள்

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 401 | விஞ்ஞானம் Science | இரசாயனவியல், பௌதீகவியல், கால்நடை விஞ்ஞானம், தாவரவியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதேனும் 03 பாடங்களை பட்டத்திற்குரிய பாடங்களாகக் கொண்ட விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 402 | கணிதம் Mathematics | விஞ்ஞானமானி பட்டம் (பௌதீகவியல்) அல்லது பிரதான பாடங்களில் கணிதம் சார்ந்த பாடங்கள் ஆகக் குறைந்தது மொத்தப் பாடத் தொகுதியின் (Credit எண்ணிக்கையில்) 1/3 பகுதியைக் கொண்டிருத்தல். |
| 403 | சிங்கள மொழியும் இலக்கியமும் Sinhala language & Literature | சிங்களம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (விசேட) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 404 | தமிழ் மொழியும் இலக்கியமும் Tamil language & Literature | தமிழ் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது தமிழைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (விசேட) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 405 | ஆங்கில மொழி English | ஆங்கிலம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (விசேட) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 406 | வரலாறு History | வரலாறு தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது வரலாறை பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (விசேட) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 407 | புவியியல் Geography | புவியியல் தொடர்பான கலைமானி (விசேட) பட்டம் அல்லது புவியியலைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 408 | குடியியற் கல்வி Civic Education | கலைமானி விசேட பட்டம் (குடியியற் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்/அரசியல் விஞ்ஞானம்) அல்லது கலைமானி சாதாரண பட்டம் (குடியியற் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்/ அரசியல் விஞ்ஞானம்) ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 409 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி Business & Accounting Studies | வணிகப் பாடத்துறை சார்ந்த ஏதேனுமொரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 410 | முயற்சியாண்மைக் கல்வி Entrepreneurship Studies | வணிகப் பாடத்துறை சார்ந்த ஏதேனுமொரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 411 | பிரெஞ்சு French | பிரெஞ்சு மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 412 | ஹிந்தி Hindi | ஹிந்தி மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 413 | யப்பான் மொழி Japanese | யப்பான் மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 414 | அரபு Arabic | அரபு மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 415 | ஜேர்மன் மொழி German | ஜெர்மன் மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 416 | சீன மொழி Chinese | சீன மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 417 | ரஷ்ய மொழி Russian | ரஷ்ய மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 418 | கொரியா மொழி Korean | கொரியா மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 419 | இரண்டாம் மொழி (சிங்களம்)<br>2nd language Sinhala | கலைமானி விசேட பட்டம் அல்லது<br>சாதாரண பட்டம் மற்றும் இரண்டாம் மொழியாக சிங்களம் எனின், க.பொ.த. (சா.த.) இல் தமிழ் மொழியை ஒரு பாடமாக செய்து ஆகக் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல். |
| 420 | இரண்டாம் மொழி (தமிழ்)<br>2nd language Tamil | கலைமானி விசேட பட்டம் அல்லது<br>சாதாரண பட்டம் மற்றும் இரண்டாம் மொழியாக தமிழ் எனின், க.பொ.த. (சா.த.) இல் சிங்கள மொழியை ஒரு பாடமாக செய்து ஆகக் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல். |
| 421 | சங்கீதம் (கீழைத்தேய)<br>Music (Oriental) | உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள அரங்கியற் கலை தொடர்பான கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுக் கொண்டுள்ள கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்காக அரங்கியற் கலை/நுண்கலை/ கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 422 | சங்கீதம் (மேலைத்தேய)<br>Music (Western) | உரிய பட்டம் மற்றும் க.பொ.த. உயர் தரப் பரீட்சையின் மேலைத்தேய சங்கீதப் பாடத்திற்கு A அல்லது B சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது<br>உரிய பட்டத்துடன் கீழே தரப்பட்டுள்ள தகைமைகளில் ஆகக் குறைந்தது ஒரு தகைமையையேனும் கொண்டிருத்தல்.<br>Pass in Grade VI or above in Practical and Theory exams conducted by one the following institutions.<br>• Department of Examinations, Sri Lanka<br>• Trinity College of Music, London<br>• Royal Schools of Music, London<br>• London College of Music<br>• Institute of Western Music and Speech, Sri Lanka (IWMS) |
| 423 | சங்கீதம் (கர்நாடக)<br>Music (Carnatic) | உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றிலிருந்து உரிய பாடம் தொடர்பாக அரங்கியற் கலை/ நுண்கலை/கலைமானி விசேட பட்ட மொன்றைப் பெற்றிருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 424 | சித்திரம் Art | சித்திரக் கலை/மூர்த்திக் கலை பாடம் மற்றும் உரிய பாடம் தொடர்பான கட்புல கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>சித்திரக் கலை/ சிற்பக் கலை பாடம் மற்றும் உரிய பாடம் தொடர்பான நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் உரிய பாடத்திற்காக பெற்றுள்ள பட்டமொன்று அல்லது<br>உரிய சாதாரண பட்டத்தின் மொத்தப் பாடத் தொகுதியின் 1/3 சித்திரப் பாடம் தொடர்பானதாகவும் மற்றும் க.பொ.த உயர் தர சித்திரக் கலை பாடத்திற்கு A அல்லது B சித்தி பெற்றிருத்தல். |
| 425 | நடனம் (தேசிய)<br>Dancing (Oriental) | உரிய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றினால் உரிய பாடத்திற்காக பெற்றுக்கொண்டுள்ள அரங்கியற் கலை/ நுண்கலை/ கலைமானி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல். (நியமன அதிகாரியால் நடாத்தப்படும் உள்நாட்டு நடன திறன்கள் தொடர்பான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடையும் நிபந்தனையின் கீழ்) |
| 426 | நடனம் (பரதம்)<br>Dancing (Bharatha) | உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றிலிருந்து உரிய பாடம் தொடர்பாக பெற்றுள்ள அரங்கியற் கலை/ நுண்கலை/ கலைமானி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 427 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்/தமிழ்)<br>Drama and Theatre | உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள அரங்கியற் கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள நுண்கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>உரிய பாடத்தின் கீழ் பெற்றுள்ள கலைமானி (விசேட) பட்டம் அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகமொன்றிலிருந்து உரிய பாடம் தொடர்பாக அரங்கியற் கலை/ நுண்கலை/கலைமானி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 428 | இலக்கிய நயம் (சிங்களம்)<br>Appreciation of Literary (Sinhala) | சிங்களம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 429 | இலக்கிய நயம் (தமிழ்)<br>Appreciation of Literary (Tamil) | தமிழ் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>தமிழைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| *பாடக் குறியீட்டு இலக்கம்* | *பாடம்* | *தகைமை* |
|---|---|---|
| *430* | இலக்கிய நயம் (ஆங்கிலம்)<br>Appreciation of Literary (English) | ஆங்கிலம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது<br>ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்ட கலைமானி (சாதாரண) பட்டமொன்றைக் கொண்டிருத்தல். |
| *431* | இலக்கிய நயம் (அரபு)<br>Appreciation of Literary (Arabic) | அரபு மொழி தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அரபு மொழியை பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைக் கொண்டிருத்தல். |
| *432* | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>Information & communication Technology | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| *433* | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்<br>Agriculture & Food Technology | விவசாயம் தொடர்பான ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டம் அல்லது ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றில்/ உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பட்டமொன்றில் மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி விவசாயம் சார்ந்த பாடங்களாக இருத்தல். |
| *434* | நீரியல் வளங்கள் தொழில் நுட்பவியல்<br>Aquatic Bio resources Technology | விவசாயம் தொடர்பான ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டம் அல்லது<br>கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளங்கள் தொடர்பான விஞ்ஞானமானி பட்டமொன்று அல்லது<br>நீரியல் வள முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது<br>ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றின் மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி நீரியல் வளங்கள் தொழில்நுட்பப் பாடங்களாக இருத்தல். |
| *435* | கைத்திறன் கலை<br>Art and Craft | கட்புலக் கலை விசேட பட்டம் (சித்திரம், சிற்பம், அச்சுக் கலை மற்றும் ஜவுளி மற்றும் ஜவுளி சார்ந்த கலைகள் போன்றன) அல்லது<br>கட்புலக் கலை மற்றும் திட்டமிடல் விசேட பட்டம் (சித்திரக் கலை மற்றும் கிரபிக்) அல்லது<br>கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை விசேட பட்டம் அல்லது கலைமானி அல்லது நுண்கலைமானி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் (சித்திரக் கலை/ கிரபிக்/ சிற்பக் கலை/ கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்கள் அல்லது ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமொன்றாக தொடர்ந்திருத்தல். |
| *436* | மனைப் பொருளியல்<br>Home Economics | மனைப் பொருளியல் பாடத்தில் சாதாரண சதரப் பரீட்சையில் A சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொ.த உயர் தரப் பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது<br>உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட<br>பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருத்தல் அல்லது<br>மனைப் பொருளியலுக்கான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றைத் தொடர்ந்து டிப்ளோமா அல்லது சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டதாரியாக இருத்தல் அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் மனைப் பொருளியல் பாடத்திற்கான பட்டதாரியாக இருத்தல். |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 437 | செயன்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் Practical and Technical Skills | க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பவியல் பாடத் துறையில் ஆகக் குறைந்தது 03 பாடங்களிலேனும் சித்தியடைந்திருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படக்கூடிய பல்கலைக்கழகமொன்றின் ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டதாரியாக இருத்தல். |
| 438 | நிர்மாணம் மற்றும் தொழில்நுட்பம் Design and Technology | உரிய பாடத் துறையில் தொழில்நுட்பமானி/ பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டப் பாடநெறியின் உள்ளடக்கங்களில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி இப் பாடம் சார்ந்ததாக இருத்தல் அல்லது<br>தேசிய தொழில்நுட்ப சான்றிதழ், தேசிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனமொன்றில் அதற்கு சமனான ஒரு வருடத்திற்கு குறையாத பாடம் சார் தொழில்நுட்ப துறைக்குரிய பாடநெறியொன்றைத் தொடர்ந்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படக் கூடிய பல்கலைக்கழகமொன்றில் எந்தவொரு பாடத்துறையிலேனும் பட்டதாரியாக இருத்தல். |
| 439 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி Health and Physical Education | விஞ்ஞானமானி (உடற் கல்வி) கௌரவ பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி கௌரவ பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 440 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி Communication and Media Studies | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியை பிரதான பாடமொன்றாக கொண்ட ஏதேனுமொரு கலைமானி (பொது) பட்டத்தைப் பெற்றிருத்தல். |

5.1.4. வயதெல்லை:

விண்ணப்ப இறுதித் திகதிக்கு வயது 40 வருடங்களை விட அதிகமானவர்களாக இருத்தலாகாது. (அதற்கமைய 2005.02.10 திகதி அல்லது அதற்கு முன்னரும் 1983.02.10 திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவர்களாவர்.)

5.1.5. ஏனைய தகைமைகள் :

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப இறுதித் திகதிக்கு இப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அவசியமான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
iv. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

6.விண்ணப்பிக்கும் முறை:

6.1 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலை மூலமாக அனுப்பி வைத்த விண்ணப்பப்படிவத்தின் மென் பிரதியின் வன் பிரதியியை தபால் மூலமாகவும் அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த இரண்டு பிரதிகளும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அம் மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி ஆகிய இரண்டையும் பரிசோதித்து சரிபார்க்கப்பட்டு (Verify) உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாக திணைக்களம் ஏற்றுக் கொண்டமை/ஏற்றுக் கொள்ளாமை தொடர்பாக நிகழ்நிலை விண்ணப்பித்தலின் போது உபயோகித்த தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சலூடாக அறியத்தரப்படும். நிகழ்நிலையூடாக விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொது ஆலோசனைப் படிவத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது குறித்த ஆலோசனைகளை முறையாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6.2 **பரீட்சை நடைமுறை**

6.2.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும்.

6.2.2 இவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலின் இறுதியில் அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரர்களால் கோரப்படும் நகரங்கள் அட்டவணை 04 இன் படி மாத்திரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னராக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஏதேனுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை நிறுவுவதற்காக போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின், குறித்த விண்ணப்பதாரர்கள் அவர்கள் இரண்டாவது விருப்பாக தெரிவுசெய்துள்ள நகரத்தில் அல்லது அண்மையிலுள்ள வேறு ஒரு நகரத்தில் நிறுவப்படும் பரீட்சை நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து நகரங்களிலும் அல்லது அதிகளவிலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்காக போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

6.2.3 அனைத்து விண்ணப்பதாரர்களும் இப் பரீட்சையில் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) நியமனப் பாடத்திற்கான மொழி மூலமாக கருதப்படும்.

6.2.4 விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடும் பாடம், பாடத்திற்கான விருப்பு வரிசை, விண்ணப்பிக்கும் மொழி மூலம், பரீட்சை நிலையம் போன்றவற்றில் பின்னராக மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.2.5 பரீட்சை இரண்டு (02) வினாப் பத்திரங்களை கொண்டதாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு (02) வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் ஆகக் குறைந்து 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

6.2.6 ஒரு தடவையின் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

6.3 ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே முன்னிலைப்படுத்த முடியும்.

6.4 விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தமது கையெழுத்தினை தமது நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்திக்கொண்டிருத்தல் வேண்டும்.

6.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் எனும் ஊகிப்புடன் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னராக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக அனுப்பி, விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியையும் சரியான முறையில் பூரணப்படுத்தி அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டவுடன் அவ் விடயம் தொடர்பாக பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். குறித்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) தினங்களுக்குள் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அவ் விடயம் தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஏற்பாட்டுக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறாக விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிக்கும் ஒருவராயின் குறித்த விபரங்களுடன் தொலை நகலூடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொலை நகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ளவாறு கோரிக்கைக் கடிதமொன்றை தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் விளைதிறன் மிக்கதாக இருக்கும். அவ்வாறாக விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தங்கள் வசம் விண்ணப்பித்த விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றையும் அதனை தபால் செய்யும் போது கிடைக்கப்பெற்ற பதிவுத் தபால் இரசீதினையும் தயார் நிலையில் வைத்துக் கொள்வது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்.

07. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

